# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**ஆணை நாள்: 09.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். SA4828/F/2019**

**திரு S.M.சிக்கந்தர் பாதுஷா ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமை கண்காணிப்பாளர்,**
**தமிழ்நாடு வக்ஃபு வாரியம்,**
**எண்.1, ஜாபர்சிராங் தெரு,**
**வள்ளல்சீதக்காதி நகர், சென்னை - 600 001. ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **02.11.2018** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **23.04.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **25.05.2019** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (09.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு S.M.சிக்கந்தர் பாதுஷா மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமை கண்காணிப்பாளர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், எண்.1, ஜாபர்சிராங் தெரு, வள்ளல் சீதக்காதி நகர், சென்னை ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் **02.11.2018** தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திண்டுக்கல் மாவட்டம் பழனி டவுன் முஸ்லீம்

தர்ம பரிபாலன சங்கம் உற்பட்ட இடம் காலிமனை கடந்த 06.02.2016 15,000 + மாத வாடகை 25,000 பெற்றுக்கொண்டு இரசீது மற்றும் ஒப்பந்தம் 600 சதுரஅடி ½ செண்ட் வீடு கட்டுவதற்கு தான் குடியிருக்க வாழ்வுரிமைக்கு கொடுக்கப்பட்ட இடம் காம்ராஜ் வீதி மதினா நகர் மதனிஷா தர்ஹா பின்புறம் எண் கண்காணிப்பில் இருந்த தனக்கு கொடுக்கப்பட்ட இடம் கடந்த 10.07.2017 அன்று சங்கம் தலைவர் மற்றும் உள்ள நிர்வாகிகள் இடம் அனுமதி வாங்கி மனு கொடுத்து இரசீது நகல் கொடுத்து இந்த இடத்தில் தகரசெட் அமைத்துள்ளதாகவும் தளம் போட்டு கரண்ட் வாங்குவதற்கும் அனுமதி வழங்ககோரி வக்ஃபு வாரியத்திற்கு மனு சம்மந்தமாக வக்ஃபு ஆய்வாளர் திண்டுக்கல் வக்ஃபு கண்காணிப்பாளர் மதுரை சையது வாஜித் இன்பெட்டர் அவர்கள் உமர் பாரூக் சூப்ரண்ட் அவர்கள் மற்றும் வக்ஃபு வாரியர் மதுரை மண்டல Branch சென்னை அதிகாரிகள் மேலும் C.O முதன்மை செயல் அலுவலர் அவர்கள் வக்ஃபு வாரிய தலைவர் அவர்கள் இது சம்மந்தமாக மனு இந்தியன் ரெஜிஸ்டர் போஸ்டில் 25 மனு பெற்றுவந்த Acknowledge கார்டு 17, 18 Personal Courier மனு அனுப்பி வைத்த Receipt அனுப்பி வைத்த எந்த மனு தொடர்பான தகவல்களை 16 இனங்களில் வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், எண்.1, ஜாபர்சிராங் தெரு, வள்ளல்சீதக்காதி நகர், சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 06.12.2018 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் சரியான தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 16.03.2019 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம் & போர்டு, எண்.1, ஜாபர்சிராங் தெரு, வள்ளல்சீதக்காதி நகர், சென்னை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 24.04.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். அதில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 25.05.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தனக்கு திருப்தியற்ற தகவலை வழங்கியிருப்பதால் தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க உத்தரவிடுமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் தொடர்பான நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் தகவல் வழங்க இயலவில்லை என ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் 02.11.2018 தேதியிட்டு கோரிய தகவல்களுக்கு நீதிமன்ற வழக்கு விசாரணை முடிந்தவுடன் அது சம்மந்தப்பட்ட தகவலை **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத்**

தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

- மேல்முறையீட்டாளர் 02.11.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.

ஒம்/- (ச.த. தமிழ்குமார்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண். SA4828/F/2018</u>**

**பெறுநர்**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமை கண்காணிப்பாளர்,**
**தமிழ்நாடு வக்ஃபு வாரியம்,**
**எண்.1, ஜாபர்சிராங் தெரு,**
**வள்ளல்சீதக்காதி நகர், சென்னை - 600 001.**

**<u>மனுதாரர்</u>**

**திரு S.M.சிக்கந்தர் பாதுஷா,**
**த/பெ. S.முஹம்மது இப்ராஹிம்,**
**எண்.186, காம்ராஜ் வீதி, மதினா நகர்,**
**மதனிஷா தர்கா வளாகம், பின்புறம்,**
**பழனி, திண்டுக்கல் மாவட்டம் - 624 601.**

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-19.11.2020